அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 233

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
28 டிசம்பர், 1983.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்
தாபனங்களினதும், நியதிச்சட்டசபைகளினதும்
தலைவர்கள் அனைவருக்கும்.

மீள வேலைக்கமர்த்தப்பட்ட ஓய்வு பெற்றவர்களும் மேலதிக பதவிகளில் பதிற்கடமை புரிதற்கு நியமிக்கப்பட்டவர்களுமான அரசாங்க உத்தியோகத்தரின் வேதனங்களும் வரும்படிகளும்.

1. அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற ஒருவரை அரசாங்க சேவையின் ஒரு பதவியில் மீள அமர்த்துவதற்கு அல்லது அரசக் கூட்டுத்தாபனமொன்றில் வேலைக்கமர்த்துவதாலல் முன்கூட்டியே அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும் என்பதையும்;

11. 60 வயதை அடைய முன் ஒருவர் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருந்தால் அவரை அரசாங்க சேவையில் மீள அமரத்துவதோ, அரசக் கூட்டுத்தாபனமொன்றில் வேலைக்கமரத்துவதோ, அவ்வாறு செய்தற்குப் பிரத்தியேக காரணங்கள் உண்டு என அமைச்சரவை திருப்தியடைந்தாலன்றி, அது இயலாதகாரியமாகும் என்பதையும்;

111. நியதிச் சட்டத்தின் கீழ் ஒரு அரசாங்க உத்தியோகத்தர் மேலதிகப் பதவி ஒன்றினுக்குரிய முழுக்கடமைகளையும் நிறைவேற்ற வேண்டிய சந்தர்ப்பங்கள் தவிர அரசாங்க சேவையிலும் அரசக் கூட்டுத் தாபனத்திலும் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளின் கடமைகள் அனைத்தையும் ஒருவர் நிறைவேற்ற வேண்டுமானால் அமைச்சரவையின் அங்கிகாரத்தைப் பெறவேண்டும் என்பதையும்;

1V. அமைச்சரவை, நியமிக்கும் அதிகாரியாக விளங்கும் சந்தர்ப்பங்கள் தவிர தற்காலிகமான பதவி வெற்றிடமொன்றை நிரப்புவதற்கு அல்லது நிலையான பதவி வகிப்பவர் இல்லாதபொழுது ஒரு அரசாங்க உத்தியோகத்தரின் சொந்தக் கடமைகளுடன் மேலதிக பதவி ஒன்றுக்கு அவரை நியமிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் அவசியமில்லை. இதுபோன்ற சந்தர்ப்பங்களில் வேதனம் வழங்குவது பற்றிய விதிகள் தாபனக் கோவையில் உண்டு என்பதையும்;

V. 60 வயது பூர்த்தியடைந்தபின் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றவரும் அரசாங்க சேவையில் மீளச் சேவைக்கமர்த்தப்பட்டவர் அல்லது அரச கூட்டுத் தாபனத்தில் வேலைக்கமர்த்தப்பட்டவருமான ஒருவருக்கு ஓய்வூதியம் (படிகளின்றி) வழங்கப்பட வேண்டும் என்பது ஒருபுறமிருக்க அவர் மீள

அமர்த்தப்பட்ட/வேலைக்கமர்த்தப்பட்ட பதவியின் வேதனமும், படிகளும் அல்லது அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட சம்மதிக்கப்பட்ட வேதனமும், வாழ்க்கைச் செலவுப் படியும் வழங்கப்படுதல் வேண்டும். ஒருவர் அதே பதவியில் மீளச் சேவைக்கு அமர்த்தப்படும் சந்தர்ப்பத்தில், ஓய்வு பெறும் பொழுது அவருக்குக் கிடைத்த சம்பளத்திலேயே அமர்த்தப்படுவார் என்பதையும்;

VI. 60 வயதைப் பூர்த்தி செய்யுமுன் ஓய்வுபெற்ற ஒருவரை மீண்டும் வேலைக்கமர்த்த அமைச்சரவை தீர்மானிக்குமானால் அவருக்கு (V)-இல் காட்டப்பட்டவாறு வேதனம் வழங்கப்பட வேண்டும் என்பதையும்;

VII. குறிப்பிட்டதொரு அரசாங்க உத்தியோகத்தர் தனது நிலையான பதவியின் முழுக் கடமைகளுக்குப்புறம்பாக நியதிச்சட்ட ஏற்பாட்டின் பிரகாரம் மேலதிக பதவி ஒன்றின் முழுக்கடமைகளையும் நிறைவேற்றும் ஒரு அரசாங்க உத்தியோகத்தர் பற்றிய வகையில் அல்லது மேற்போந்த (111)-இன் பிரகாரம் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் பற்றிய வகையில் அவருக்கு அவரது நிலையான பதவிக்குரிய சம்பளம் படிகளுடன் வழங்கப்படவேண்டும். அத்துடன் தமது நிலையான பதவிக்குரிய கடமைகளுடன் மேலதிக பதவிக்குரிய முழுக்கடமைகளையும் நிறைவேற்றுவதற்கும் அவருக்குச் சம்பளம் (படிகள் இன்றி) வழங்குதல் வேண்டும். எனினும் மேலதிக பதவியின் முழுக் கடமைகளையும் நிறைவேற்றுதற்காக வழங்கப்படும் சம்பளமானது மேலதிக பதவியின் தொடக்கச் சம்பளத்தின் ¼ஆக வரையறுக்கப்பட்டுள்ளது. சம்பளம் விதிக்கப்படாத பதவி ஒன்றினைப் பற்றிய வகையில் இந்த ¼பங்கு என்பது திறைச்சேரிச் செயலாளருடன் கலந்தாலோசித்து அரசாங்க நிருவாக அமைச்சின் செயலாளரால் செய்யப்படும் விண்ணப்பமொன்றின் பேரில் நிர்ணயிக்கப்படவுள்ள கருது சம்பளமாக அமையுறும் என்பதையும்;

02. 31-05-1982ஆம் திகதிய 197(VII)ஆம் இலக்க நிருவாகச் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்டவாறான தாபனச் சுற்றறிக்கையின் VII-ஆம் அத்தியாயத்தின் 12.6ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட பதிற்கடமைச் சம்பளத்திற்கான வரையறைகள் நடைமுறையில் இரா என்பதையும்;

03. இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளினின்று தோன்றும் வேதனமாற்றங்கள் 1-ஜனவரி 1984ஆம் திகதி முதல்தான் நடைமுறைக்கு வரும் என்பதையும் கவனத்திற் கொள்க.

ஒப்பம்: டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.